**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 17.07.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான விக்சித் பாரத் இயக்கத்தில், தூய்மைக்கு முக்கிய இடம் இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, பீகார், மற்றும் மேற்குவங்கத்திற்கு பயணம் மேற்கொண்டு, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

கடந்த 100 ஆண்டுகளில், கூட்டுறவு அமைப்புகள், நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி இருப்பதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சாதகமற்ற புவி-அரசியல் சூழலுக்கு இடையிலும், எரிசக்தி பிரச்சனையை, இந்தியா வெற்றிகரமான முறையில் சமாளித்து இருப்பதாக, மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

----------------------

*ஸ்வச் விருது 1 (16)*

2024-25ஆம் ஆண்டு தூய்மைக் கணக்கெடுப்பு அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட, 9ஆம் ஆண்டு ஸ்வச் சர்வேக்ஷன் விருதுகளை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற விழாவில் வழங்கிச் சிறப்பித்தார். மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரம், தொடர்ச்சியாக 8ஆவது முறையாக, நாட்டின் மிகத் தூய நகரமாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு, விருது பெற்றது. நாட்டின் அதி

சுத்தமான சூப்பர் ஸ்வச் நகரங்கள் குழுவில் முதல் நகரமாகவும், இந்தூர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. சுத்தமான நகரங்கள் பிரிவில், சூரத் 2ஆம் இடமும், நவி மும்பை 3ஆம் இடமும் பெற்றன.

இந்தியாவின் கலாச்சார-ஆன்மீக பாரம்பரியத்திலும், 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான விக்சித் பாரத் இயக்கத்திலும், தூய்மைக்கு மிக முக்கிய இடம் இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, விழாவில் பேசுகையில் கூறினார். தூய்மையான, ஆரோக்கியமான, முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்த, அனைத்து மக்களும் முன்வந்து பாடுபட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

ஸ்வச் விருது 2 (7)

விழாவின் போது, பல்வேறு பிரிவுகளில், மொத்தம் 78 விருதுகள் வழங்கப்பட்டன. **3 லட்சம் முதல் 10 லட்சம் மக்கள் தொகை** கொண்ட நகரங்கள் பிரிவில், நொய்டா மிகத் தூய நகரமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, விருது பெற்றது. 10 லட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் பிரிவில், அகமதாபாத் முதலிடம் பெற்றது.

தூய்மைக் கணக்கெடுப்பு முடிவுகளின்படி, புதுச்சேரியின் தூய்மை நிலவரம் குறித்து, ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

ஸ்வச் விருது 3 (13)

**(வாய்ஸ்)**

ஸ்வச் சர்வேக்ஷன் ஆய்வில், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் முன்னேற்றநிலைத் தூய நகரமாக, உழவர்கரை நகராட்சி, தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. 3 லட்சம் முதல் 10 லட்சம் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் பிரிவில் உழவர்கரை நகராட்சி, 7 ஆயிரத்து 932 புள்ளிகளுடன், 55ஆம் இடம் பெற்றுள்ளது. உழவர்கரை நகராட்சிப் பகுதியில், குப்பை கிடங்குகள் 100 சதவிகிதம் மீட்கப்பட்டு, குடியிருப்புப் பகுதிகள், மற்றும், சந்தைப் பகுதிகளில், தலா 95 சதவிகித தூய்மை எட்டப் பட்டுள்ளது. வீடு வீடாகச் சென்று, குப்பை சேகரிக்கும் பணிகள், 60 சதவிகித வீடுகளுக்கு விஸ்தரிக்கப் பட்டுள்ளன. நீர் நிலைகளில், 54

சதவிகித அளவிற்கும், பொதுக் கழிவறைகளில், 40 சதவிகித அளவிற்கும், தூய்மை எட்டப் பட்டுள்ளது. புதுச்சேரியில், 30 சதவிகித குப்பைகளை தரம் பிரித்து அகற்றப் படுவதும், 31 சதவிகித குப்பைகள், மறு சுழற்சி, மற்றும் மறு பயன்பாட்டிற்கு அனுப்பப் படுவதும் குறிப்பிடத் தக்கது.

ஸ்வச் விருது 4 (9)

புதுச்சேரியின் இதர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புளை பொறுத்தவரை, புதுச்சேரி நகராட்சி, தூய்மைப் பராமரிப்பில், 7 ஆயிரத்து 449 புள்ளிகளும், காரைக்கால் நகராட்சி, 4 ஆயிரத்து 856, மாஹே நகராட்சி, 2 ஆயிரத்து 938, மற்றும், ஏனாம் நகராட்சி, ஆயிரத்து 731 புள்ளிகளும் பெற்றுள்ளன. நடுத்தர நகரங்களின் 824 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே, புதுச்சேரி, காரைக்கால், மற்றும், ஏனாமிற்கு, முறையே, 309, 689, மற்றும், 819ஆவது இடம் கிடைத்துள்ளது. சிறு நகரங்களின் ஆயிரத்து 585 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே, மாஹே, ஆயிரத்து 536ஆவது இடம் பெற்றுள்ளது.

----------------------

*மோடி-பயணம் 1 (5)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, பீகார், மற்றும் மேற்குவங்கத்திற்கு பயணம் மேற்கொள்கிறார். இரு மாநிலங்களிலும், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். பிரதமரின் இரு மாநில பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்.....

**(வாய்ஸ்)**

*மோடி-பயணம் 2 (15)*

**(வாய்ஸ்)**

நாளை, பீகார் மாநிலம் மோத்திஹாரியில் நடைபெறும் விழாவில், மொத்தம் 7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், பிரதமர் தொடக்கி வைக்கும் திட்டங்கள், மற்றும், அடிக்கல் நாட்டும் திட்டங்களில், சாலை, ரயில்வே, ஊரக வளர்ச்சி, மீன்வளம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளுக்கான திட்டங்கள் அடங்கும். விழாவின் போது, 2 அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களையும், பிரதமர் கொடியசைத்து தொடக்கி

வைக்கிறார். தீன்தயாள் அந்த்யோதயா-தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 61 ஆயிரத்து 500 சுய உதவிக் குழுக்களுக்கு, மொத்தம் 400 கோடி ரூபாய் நிதி உதவிகளையும் அவர் வழங்குகிறார்.

தொடர்ந்து மேற்குவங்க மாநிலத்தில் நாளை பிரதமர் தொடக்கி வைக்கும் திட்டங்கள், மற்றும், அடிக்கல் நாட்டும் திட்டங்களில், எண்ணெய்-எரிவாயு, மின்சாரம், சாலை,மற்றும் ரயில்வே திட்டங்கள் அடங்கும். மேற்கு பர்த்தமான் மாவட்டத்தில், சேது பாரதம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 2 சாலை மேம்பாலங்களும், பிரதமர் தொடக்கி வைக்கும் திட்டங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

----------------------

*அமித் ஷா* (11)

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று, ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில், கூட்டுறவு-வேலை வாய்ப்பு விழாவில் கலந்து கொண்டார். கடந்த 100 ஆண்டுகளில், கூட்டுறவு அமைப்புகள், நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி இருப்பதாக அவர் கூறினார். கூட்டுறவுத துறை மூலமான, பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களை, விழாவின் போது அமைச்சர் திரு. அமித் ஷா தொடக்கி வைத்து, பல்வேறு மக்கள் நலத் திட்டங்களின் பயனாளிகளுக்கு உதவிகளை வழங்கினார். உலகின் மிகப் பெரிய உணவு தானிய சேமிப்புத் திட்டத்தின் கீழ் நிறுவப் பட்டுள்ள 24 சேமிப்புக் கிடங்குகளையும், சிறு தானியங்களின் பயன்பாட்டை பெருக்குவதற்கான, 64 ஸ்ரீஅன்னம் விநியோக மையங்களையும் அவர் திறந்து வைத்தார்.

----------------------

*எரிசக்தி* (14)

நாட்டிற்கு தேவையான எரிசக்தியை, போதிய அளவில், சரியான விலையில், நீடித்த அடிப்படையில் கிடைக்கச் செய்வது, முக்கியமான மும்முனை பிரச்சனை என்றும். உலகின் பல்வேறு பகுதிகளில் நிலவும், சாதகமற்ற புவி-அரசியல் சூழலுக்கு இடையிலும் இந்தியா,

இப்பிரச்சனையை, வெற்றிகரமாக சமாளித்து இருப்பதாகவும், மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், **ஓப்பன் ஏக்கரேஜ் உரிமக் கொள்கை அமலாக்கத்தின்** 10ஆவது சுற்றில், 2 லட்சம் சதுர **கிலோ மீட்டர் பரப்பில்**, எண்ணெய் கண்டுபிடிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், குறிப்பாக அந்தமான் கடற்பகுதியில், **கயானா நாட்டின் பரப்பளவிற்கு இணையான** எண்ணெய் வயல்களை கண்டுபிடிக்க முடியும் என அரசு நம்புவதாகவும் கூறினார். எண்ணெய் ஆதாரங்களை கண்டுபிடிக்கும் நிபுணர்களுக்கு, தரமான அடிப்படைத் தரவுகள், நிதிச் சலுகைகள், மற்றும், நிலையான ஒழுங்குமுறை விதிகளை வழங்க, அரசு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

----------------------

*ரங்கசாமி* (7)

புதுச்சேரி பாகூர்பேட் பகுதியில், அண்மையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த, முத்தம்மாள் என்பவரின் குடும்பத்தினருக்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமான 10 லட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அறையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், மற்றும், அதிகாரிகள் உடன் இருந்தனர்.

----------------------

*வைத்திலிங்கம்* (8)

புதுச்சேரியில், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம், உழவர்கரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முத்துபிள்ளைப் பாளையம் மற்றும் ஜான்குமார் நகரில், மொத்தம் 41 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகளை, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வைத்திலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசங்கர் ஆகியோர், இன்று பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தனர். முன்னாள்

துணை சபாநாயகர் திரு. பாலன், அதிகாரிகள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

---------------------

*ரயில்வே போலீஸ்* (6)

புதுச்சேரியில், ரயில்வே பாதுகாப்புப் படையின் புதிய நிலை, மற்றும் பாசறையை, தெற்கு ரயில்வே RPF-IG திரு. ஈஸ்வரராவ் இன்று காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். திருச்சிராப்பள்ளி ரயில்வே கோட்ட மேலாளர் திரு. அன்பழகன், கூடுதல் கோட்ட மேலாளர் திரு. செல்வன், முதுநிலை கோட்ட பாதுகாப்பு ஆணையர் டாக்டர் அபிஷேக் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

---------------------

*போர்க் கப்பல்* (12)

எதிரிகள் அறியா வண்ணம் மறைந்து இருந்து, ஏவுகணை மூலம் எதிரி இலக்குகளை தாக்கவல்ல, இந்தியாவின் அதி நவீன INS – நீலகிரி போர்க் கப்பல், இன்று முதல் முறையாக சென்னை துறைமுகத்திற்கு வந்துள்ளது. Project – 17A திட்டத்தின் கீழ் முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிக்கப்பட்ட INS – நீலகிரி போர்க் கப்பல், கப்பல் கட்டும் திறன், மற்றும், இதர கடல்சார் திறன்களில், இந்தியா எட்டி உள்ள வளர்ச்சிக்கு சான்றாக அமைந்துள்ளது. இந்தியக் கடற்படையின் செயல்பாட்டு வல்லமையை கணிசமாக மேம்படுத்தும் வகையில் அதி நவீன ஆயுதங்கள், மற்றும், உணர்வுக் கருவிகள் இக்கப்பலில் இடம்பெற்றுள்ளன. நாட்டின் பழமையான ராணுவக் கல்லூரி அமைந்துள்ள நீலகிரி மலைப் பகுதியின் பெயர் தாங்கிய இந்த அதி நவீன போர்க் கப்பலை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இவ்வாண்டு ஜனவரி 15ஆம் தேதி, இந்திய கடற்படையில் சேர்த்து வைத்தார்.

---------------------

*அரசுச் செயலர்* (9)

மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் இணைச் செயலர் திரு. பிரித்துல் குமார், வரும் 21ஆம் தேதி முதல், தமிழகத்தில் 3 நாள் பயணம் மேற்கொள்கிறார். தென் பிராந்திய ஆகாஷ்வாணி, மற்றும், தூர்தர்ஷன்

நிலையத் தலைவர்களுடன் அவர் கூட்டம் ஒன்றை நடத்தி, வானொலி, மற்றும் தொலைகாட்சி நிலையங்களின் செயல்பாடுகளை மறு ஆய்வு செய்வார் என எதிர்பார்க்கப் படுகிறது. பிரசார் பாரதியின் வருவாய் உத்திகள், மற்றும், வர்த்தக மேம்பாடு குறித்து, ஊடகங்கள், மக்கள் தொடர்பு அமைப்புகள், மற்றும், விளம்பர நிறுவனங்களுடன், வட்டமேசைக் கூட்டம் ஒன்றையும், அவர் நடத்த இருக்கிறார்.

---------------------

*வானிலை* (14)

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, மற்றும், மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, கடந்த 23ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், தேனி, திண்டுக்கல், காஞ்சிபுரம், திருவள்ளூர், மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில், கனமழைக்கும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி மாவட்டத்தின் ஒரிரு இடங்களில், மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்புள்ள தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில், 12 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------

*கிரிக்கெட்* (4)

இந்தியா-இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான, 2ஆவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி, லண்டனில் நாளை மறுநாள் நடைபெற உள்ளது. 3 போட்டிகள் கொண்ட இத்தொடரில், இந்தியா தற்போது, 1க்கு-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

---------------------

*மாண்டவியா-விளையாட்டு* (7)

மத்திய இளைஞர் விவகாரங்கள், மற்றும், விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று புதுடெல்லியில், கேலோ பாரத் மாநாட்டை தொடக்கி வைத்தார். விளையாட்டை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை, அவர் தமது உரையின் போது வலியுறுத்தினார். மத்திய-மாநில அரசுகள், விளையாட்டு அமைப்புகள், பொது மக்கள், மற்றும், சம்பந்தப்பட்ட அனைத்து பிரிவினரின் கூட்டு முயற்சி மூலம், இந்தியா இதை எட்ட முடியும் என்று அவர் கூறினார்.

----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான விக்சித் பாரத் இயக்கத்தில், தூய்மைக்கு முக்கிய இடம் இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, பீகார், மற்றும் மேற்குவங்கத்திற்கு பயணம் மேற்கொண்டு, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

கடந்த 100 ஆண்டுகளில், கூட்டுறவு அமைப்புகள், நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி இருப்பதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சாதகமற்ற புவி-அரசியல் சூழலுக்கு இடையிலும், எரிசக்தி பிரச்சனையை, இந்தியா வெற்றிகரமான முறையில் சமாளித்து இருப்பதாக, மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.